# உள்நோக்கத்தோடு T.A to J.E II Grade பதவி உயர்வு வழங்குவதற்கு முட்டுக்கட்டை போட நினைக்கும் குழப்ப வாதிகளும் மற்றவர்களும் இந்த வழக்கின் பின்னணி குறித்த கீழ்கண்ட விவரங்களை தெரிந்துக் கொள்வீர்!

மின்வாரியத்தில் கள உதவியாளராக பணியில் சேர்ந்து பகுதிநேர பட்டயம் படித்தவர்கள் மின்வாரிய விதிமுறைகள்படி ஒவ்வொரு ஆண்டும் உள்முகத் தேர்வு மூலம் தொழில்நுட்ப உதவியாளராக ஆகிட வாரியம் அளித்த வாய்ப்பை அவர்கள் நிராகரித்தனர். மேலும் ஏற்கனவே நேரடி நியமனம் மூலம் பணியில் சேர்ந்த பட்டய பொறியாளர்களுக்கு CI, FM, Spl. Grade FM ஆகிய பதவிகள் வழங்கப்பட்டு வந்தது. 1987க்கு பிறகு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த பதவி உயர்வு வாய்ப்புகள் நேரடி நியமனம் பட்டய பொறியாளர்களுக்கு நிராகரிக்கப்பட்டது. T.A. to J.E IInd Grade -என பதவி உயர்வு சேனல் மாற்றியமைக்கப்பட்டது.

அதன் பிறகு மின்வாரியத்தில் களப்பணியாளராக சேர்ந்து பகுதி நேர பட்டயம் படித்தவர்கள் 90 சதவீதத்திற்கு மேலானவர்கள் வாரிய விதிமுறைகளின்படி உள்முகத் தேர்வு மூலம் தொழில் நுட்ப உதவியாளராக பணியேற்பு செய்தனர். குறிப்பிட்ட 5 சதவீதத்திற்கும் குறைவானவர்கள் பகுதி நேர பட்டயப் படிப்பு படித்த பின்பு உள்முகத் தேர்வு மூலம் வாரியம் ஒவ்வொரு ஆண்டும் தொழில்நுட்ப உதவியாளராக அளித்த வாய்ப்பை நிராகரித்துவிட்டு, ஏற்கனவே நேரடி நியமனம் மூலம் பணியில் சேர்ந்த பட்டயப் பொறியாளர்களுக்கு வழங்கப்பட்டு அதன் பிறகு நிராகரிக்கப்பட்ட C.I., F.M., Spl. Grade FM ஆகிய பதவிகளுக்கு பதவி உயர்வு மூலம் சென்று பலன் அடைந்தனர்.

நேரடி நியமன பட்டயப் பொறியாளர்களுக்கு 1987 முதல் ஒப்பந்தம் மூலமும், வாரிய உத்திரவு மூலமும் நிராகரிக்கப்பட்ட பதவி உயர்வு பதவிகளான CI,FM,Spl. Gr FM பதவிகளை பெற்ற பகுதி நேர பட்டய பொறியாளர்கள் வாரியம் உள்முகத் தேர்வு மூலம் T.A., பதவியை பெறுவதற்கு ஆண்டுதோறும் அளித்த வாய்ப்பை நிராகரித்தவர்கள் மின்சார வாரியம் JE IInd Grade பதவி உயர்வு 3:1 என்ற விகிதத்தில் (Diplamo : Non Diplamo) வழங்கும் போது பட்டய பொறியாளர்களின் விகிதமான 3ல் உள்ளடக்கி JE IInd Grade பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென 2002ல் “Tamil Nadu Electrical Workers Federation” -என்ற சங்கத்தின் சார்பில் வழக்கு தொடர்ந்தனர்.

இதைத் தொடர்ந்து 2003,2004, 2005, 2007, 2008 ஆகிய ஆண்டுகளில் இதே போன்று பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டனர். இதைப்பற்றி கவலைக் கொள்ளாமல் இருந்த பொறியாளர் சங்கம், இந்த வழக்கில் தங்களையும் எதிர் மனுதாரராக சேர்த்திடக் கோரி 2009ல் மனு செய்து 24.11.2010ல் சென்னை உயர்நீதிமன்ற உத்திரவு மூலம் இந்த வழக்குகளில் எதிர் மனுதாரராக பொறியாளர் சங்கம் தன்னையும் இணைத்துக் கொண்டது மேலும் இந்த வழக்கில் தனிநீதிபதி அவர்களால் பகுதி நேர பட்டயப் பொறியாளர்களுக்கு சாதகமாக 16.12.2010ல் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கில் வாரிய வழக்கறிஞர்களும், வாரிய அதிகாரிகளும் வழக்கு போட்ட பகுதி நேர பட்டயப் பொறியாளர்களான மனுதாரர்களுடன் கூட்டு சேர்ந்து சுயலாபத்திற்காக கும்மாளம் அடித்தார்கள் எனவும் வழக்கில் சேர்ந்த பொறியாளர் சங்கமும் T.A-க்களுக்கு சாதகமாக வாதாடாமல் கோட்டை விட்டார்கள் எனவும் தமிழகம் முழுவதும் உள்ள பல பொறியாளர்கள் பின்னாளில் குற்றம் சாட்டினர்.

கள உதவியாளராக பணியில் சேர்ந்து பகுதி நேர பட்டயம் படித்து C.I/L.I, FM, Spl Gr. FM ஆகிய களப்பிரிவு பகுதியில் பணிபுரியும் வழக்கு போட்டவர்களுக்கு சாதகமாக அவர்கள் T.A., பதவிக்கு உள்முகத் தேர்வு மூலம் வராவிட்டாலும் நேரடியாக அவர்களின் ஜூனியர்க்கு முன்னால் முன்தேதியிட்டு J.E IInd Grade பதவி உயர்வு வழங்கிட சென்னை உயர்நீதிமன்ற தனிநீதிபதி அவர்களால் 16.12.2010ல் உத்திரவிடப்பட்டது.

நேரடி நியமன T.A. களுக்கு மிகப்பெரிய அளவில் JE IInd Grade பதவி உயர்வு பெறுவதிலும் முன்தேதியிட்டு JE IInd Grade பதவி உயர்வு வழங்குவதால் ஏற்கனவே JE IInd Grade -ஆக பணிபுரிபவர்களுக்கு JE Ist Grade பதவி உயர்வு பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த 16.12.2010 தீர்ப்பினை, வழக்கில் சரியாக வாதாடாமல் தோல்வி அடைந்த எதிர் மனுதாரராக இருந்த பொறியாளர் சங்கம் பல மாதங்களாக மூடி மறைத்தது.

வாரியத்தின் சில அதிகாரிகள் வழக்கு தொடர்ந்து பகுதி நேர பட்டயப் பொறியாளர்களுடன் தங்களின் சுயலாபத்திற்காக கூட்டு சேர்ந்து 16.12.2010 தனி நீதிபதி அவர்களின் தீர்ப்பை அமுலாக்கி JE IInd Grade பதவி உயர்வு வழங்க முயற்சி செய்த போது TNPEO இதை துண்டறிக்கை மூலம் முதன்முதலில் அம்பலப்படுத்தியது. மேலும் மின்வாரியம் 16.12.2010 தீர்ப்பை அமலாக்கம் செய்யக் கூடாது எனவும், அதை வாரியம் மேல்முறையீடு செய்திட வேண்டும் எனவும் TNPEO போராடியது மேல் முறையீடு செய்ய வாரியம் செல்லாவிட்டாலும் இந்த வழக்கில் எதிர் மனுதாரராக இருந்த பொறியாளர் சங்கம், மேல் முறையீடு செய்ய அதிகார பூர்வமான வாய்ப்பை பெற்றிருந்தும் மேல்முறையீடு செய்யாமல் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கு துரோகம் செய்ததையும் TNPEO அம்பலப்படுத்தியது.

16.12.2010 தீர்ப்பை தொடர்ந்து அதை அடிப்படையாக வைத்து மேலும் 2011, 2012ல் பல வழக்குகள் தொடரப்பட்டு அதே தீர்ப்புகளை தொடர்ந்து பெற்றார்கள் இதை தொடர்ந்து TNPEO டிவிஷன் பெஞ்சில் 16.12.2010 தனி நீதிபதி தீர்ப்பால் எங்களது அமைப்பு அதில் எதிர் மனுதாரராக இல்லாத நிலையில் எங்களது சங்கத்தின் உள்ள தொழில் நுட்ப உதவியாளர்களின் பதவி உயர்வு வாய்ப்பு பாதிக்கப்படுகிறது என்பதால் அந்த தீர்ப்பின் மீது எங்களது TNPEO சங்கம் மேல் முறையீடு செய்ய அனுமதி அளிக்க வேண்டுமென மனு செய்து அனுமதி பெற்றோம்.

மேலும் TNPEO மின்வாரியத்திடம் தொடர்ந்து 16.12.2010 தீர்ப்பை அமல்படுத்தியதில் உள்ள தொடர் பாதிப்புகளை எடுத்துக் கூறியதால் மின்வாரியம் 16.12.2010 தீர்ப்பை அமல்படுத்திய போதிலும், இந்த தீர்ப்பின் மீது தனி நீதிபதி அவர்களிடம் மறுசீராய்வு மனு (Review Petition) ஒன்றை தாக்கல் செய்தது. மறுசீராய்பு மனு தனிநீதிபதி அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, மறுசீராய்வு மனுவின் மீது டிவிஷன் பெஞ்சில் மின்வாரியம் மேல் முறையீடு செய்தது. எனவே, 16.12.2010 தனிநீதிபதி அவர்கள் பகுதி நேர பட்டயப் பொறியாளர்களுக்கு JE IInd Grade பதவி உயர்வு வழங்க வேண்டும் என்ற தீர்ப்பின் மீது வாரியத்தின் மேல் முறையீட்டு மனு தற்போது நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில் உயர்நீதிமன்றம் தனிநீதிபதி அவர்களிடம் WP No 1871/2014 என்ற வழக்கின் மூலம் 10 பகுதி நேர பட்டயப்பொறியாளர்கள் JE IInd Grade to JE Ist Grade பதவி உயர்வு வழங்கக் கூடாது என தடைஉத்திரவு பெற்றுள்ளனர். இந்த தடை உத்திரவை வாரியம் நீக்கிட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமன TNPEO வாரியத்திடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும் இந்த வழக்கில் இணைந்து இந்த தடையை நீக்கவும் TNPEO நடவடிக்கை எடுத்து வருகிறது.

16.12.2010 தனி நீதிபதி அவர்களின் தீர்ப்பை ரத்து செய்திட கோரி TNPEO -வின் மேல் முறையீட்டு வழக்கு, இடைக்கால தீர்ப்பு வழங்கப்பட்ட 18.07.2014-ல் விசாரணைக்கு வந்தது (Item No 37). TNPEO -வின் மேல்முறையீட்டு வழக்கையும் அன்றைய தினம் இதர மேல் முறையீட்டு வழக்குகளோடு சேர்த்து விசாரணை செய்திட உயர்நீதிமன்ற டிவிஷன்பெஞ்ச் அனுமதி அளித்துள்ளது.

அதே 18.07.2014ல் மின்வாரியம் 16.12.2010 JE IInd Grade பதவி உயர்வு குறித்த தனி நீதிபதி அவர்களின் தீர்ப்புக்கு மேல் முறையீடு செய்த மனுவும் விசாரணைக்கு வந்தது. இந்த மேல் முறையீட்டு மனுவில் 16.12.2010 தனி நீதிபதி அவர்கள் வழங்கிய தீர்ப்பின் மனுதாரர்கள் வாரியத்தின் மேல்முறையீட்டு மனுவின் எதிர்மனுதாரர்கள் ஆவார்கள் இந்த எதிர்

மனுதாரர்கள் இடைக்கால தீர்ப்பு வழங்கிட கோரி ஒரு M.P. மனு (Miscellaneous Petition) செய்திருந்தனர்.

இந்த இடைக்கால தீர்ப்பு வழங்கிட கோரிய M.P. மனுமூலம் தாங்கள் 16.12.2010 தீர்ப்பின் மூலம் JE IInd Grade பதவி உயர்வு பெற்று விட்டதாகவும், தங்களுக்கு அடுத்த பதவி உயர்வான JE Ist Grade வழங்கிட வேண்டுமென இடைக்கால தீர்ப்பு வழங்கிட கோரியிருந்தனர்.

டிவிஷன் பெஞ்சில் பகுதி நேர பட்டயம் படித்தவர்களுக்கு JE IInd Grade பதவி உயர்வு வழங்குவது குறித்து 16.12.2010 தனிநீதிபதி தீர்ப்பின் மீது தான் மேல்முறையீட்டு விசாரணை நடந்து வரும் நிலையில், இடைக்கால தீர்ப்பு கோரும் மனு JE IInd Grade-லிருந்து JE Ist Grade என கேட்பது இந்த மேல்முறையீட்டு மனுவிற்கு சம்மந்தம் இல்லாதது. மேலும் மனுதாரர்கள் ஏற்கனவே தனிநீதிபதி அவர்களிடம் JE IInd Grade -லிருந்து JE Ist Grade பதவி உயர்வு வழங்க கூடாது என தடையுள்ளதையும் மூடி மறைத்துள்ளனர். இந்த நிலையில் JE IInd Grade லிருந்து JE Ist Grade பதவி உயர்வு வேண்டுமெனில் அவர்கள் மீண்டும் தனிநீதிபதி அவர்களிடம் தான் தனியாக Write Petiton தாக்கல் செய்திருக்க வேண்டும் என வாரியமும் இதில் மற்றொரு எதிர் மனுதாரராக மனுதாரரால் குறிப்பிடப்பட்ட பொறியாளர் சங்கமும், வாதாடி அந்த M.P. மனுவை தள்ளுபடி செய்திட வேண்டுமென கோரியிருக்க வேண்டும். வாரிய வழக்கறிஞர்கள் அவ்வாறு வாதாடாமல் பகுதி நேர பட்டயப் பொறியாளர்களுக்கு மேலும் ஒரு லாபத்தை ஏற்படுத்திக் கொடுக்க செயல்பட்டுள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. இருந்தாலும், உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் இடைக்கால தீர்ப்பாக “Any Promotion is given during the pendency of the Write Appeal, the same shall be subject to the result of the Writ Appeal”. என வழங்கியுள்ளதன் மூலம் வாரியம் எவ்வித பிரச்சனையும், வழக்கும், நீதிமன்ற தடையும் இல்லாத T.A. to J.E IInd Grade மற்றும் Non-Diplamo to J.E IInd Grade பதவி உயர்வு வழங்கும் வாய்ப்பு உறுதியாகி உள்ளது.